<u>சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.</u>

முன்னிலை– திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16–ம் நாள் செவ்வாய்கிழமை

<u>வழக்கிடை மனு எண்.03/2024 in அசல் வழக்கு எண்.92/2024</u>

1. ஜைனப்பீவீ ...மனுதாரர்/1ம் வாதி

2. சையத் பீர் பாஷா (இறந்தவர்) .... மனுதாரர்/2ம் வாதி

3. ரேஹானா

4. அனிஸ் பாத்திமா

5. அம்ரீஷ்

6. கன்சூல்மக்ரிபா .... 3, 7 உத்தேசபார்ட்டிகள்

7. கிபாயத்துல்லா ..... 2ம் வாதியின் வாரிசுகள்

/எதிர்/

1. முகமதுகாதர்

2. அமீர்ஜான் (இறந்தவர் – வாரிசு சேர்க்கவில்லை)

..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 13.02.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/1ம்வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எச்.ஷாஜஹான் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எம்.எஸ்.சங்கரபாண்டியன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

## உத்தரவு

அசல் வழக்கில் வாதியான 2ம் வாதியான சையத்பீர் பாஷா என்பவர் கடந்த 16.04.2022 தேதியன்று இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகளை இந்த வழக்கில் 3 முதல் 7 வரையிலான வாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி உ.வி.மு.ச கட்டளை XXII விதி 3–ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/1ம் வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்–**

தான் மேற்சொன்ன அசல் வழக்கில் 1ஆம் வாதி என்றும், இந்த மனுவில் மனுதாரர் என்றும், தனது சகோதரர்களான பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களிடமிருந்து தாவா 14 கடைகளிலிருந்து 1/5 பாகம் கோரியும், அச்சொத்தில் கடன் பெறக்கூடாது, வேறுயாருக்கும் உரிமை மாற்றம் செய்யக்கூடாது என உத்தரவு கோரி தாவா தொடர்ந்து உள்ளதாகவும், மேற்படி தாவா நிலுவையில் இருக்கும்போது 2ம் வாதி திடீரென உடல்நலமின்றி 16.04.2022 அன்று இறந்துவிட்டதாகவும், அதனால் 2ம் வாதியின் மனைவி மக்களை 2ம் வாதியின் வாரிசுகளாக தாவாவில் சேர்த்து வழக்கு நடத்த வேண்டி அனுமதி கோரியதாகவும், இறந்துவிட்ட 2ம் வாதியின் வாரிசுகளை தாவாவில் 3 முதல் 7 வாதிகளாக சேர்க்கவேண்டி உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்:–**

**(3.1)** மனுதாரர் இந்த மனுவினை 2ம் மனுதாரரான சையத்பீர் பாஷா கடந்த 16.04.2022 அன்று இறந்துவிட்டதாகவும், அவர் தன்னுடைய வாரிசுகளான 3 முதல் 7 மனுதாரர்களை விட்டுவிட்டு

இறந்துவிட்டதாகவும், 2ம் மனுதாரரின் வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்கவில்லை என்றும், அதனால் 701 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாகவும், மற்றும் வாரிசுகளை உரிய காலத்தில் தாவாவில் சேர்க்காததால் அபெட்மெண்ட் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், 2ம் எதிர்மனுதாரர் சையத்பீர்பாஷா 16.04.2022 அன்று இறந்துவிட்டதாகவும், அவர் 3 முதல் 7 மனுதாரர்களை தன்னுடைய வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், 2ம் மனுதாரர் 1ம் மனுதாரரின் குமாரராவார் என்றும், 1ம் மனுதாரரும் 2ம் மனுதாரரும் சேர்ந்து தாவா சொத்துக்களில் தங்களுக்கு பாகம் இருப்பதாகவும், தங்களுக்குண்டான பாகத்தை பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும் தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வாறு மேற்படி இருவரும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் மனுதாரர் இறந்துவிட்டதாகவும், 2ம் மனுதாரரின் வாரிசுகள் இந்த வழக்கில் உரிய காலத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும், 1ம் மனுதாரருக்கு 2ம் மனுதாரர் இறந்துவிட்ட விவரம் நன்கு தெரியும் என்றும், ஆனால் 1ம் மனுதாரரோ அவ்வாறு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 3 முதல் 7 மனுதாரர்களும் தங்களை இந்த வழக்கில் உரிய பார்ட்டியாக சேர்ப்பதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**4 .இங்கு தீர்மானிக்க வேண்டிய அம்சம் யாதெனில்:-**

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

(i) இருதரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் இல்லை. இருதரப்பின் வாதம் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் 2ம் வாதியான சையத்பீர்பாஷா

என்பவர் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தாக்கல் செய்து, நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 16.04.2022–ம் தேதி தனது வாரிசுகளான 3 முதல் 7 எதிர்கால வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், அதனால் மனுதாரர்கள் தங்களை இந்த தாவாவில் 3 முதல் 7 வாதிகளாக சேர்க்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் பொய்யான காரணங்களுடனும், காலதாமதப்படுத்தவேண்டும் என்றும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறுவதுபோல் இம்மனுவை அனுமதிக்காமல் போனல் இவ்வழக்கை மேற்கொண்டு நடத்த முடியாது. இம்மனுவை தள்ளுபடி செய்வதற்கு போதுமான முகாந்திரம் இல்லை. மனுதாரர்கள் இறந்த வாதியின் சட்டப்படியான வாரிசுகள் ஆவர். எனவே அவர்களை இந்த வழக்கில் வாதிகளாக சேர்க்கும்பட்சத்தில் மட்டுமே இவ்வழக்கை மேல்நடத்த முடியும். எனவே நீதியின் நலன் கருதி மனுதாரர்களை இவ்வழக்கில் 3 முதல் 7 வாதிகளாக சேர்க்க அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இவ்வாறாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

<u>முடிவில்:–</u>

1ம் மனுதாரர், மற்றும் 3 முதல் 7 மனுதாரர்கள் எதிமனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.500/–ஐ வருகின்ற 23.09.2025–ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். மீண்டும் இந்த மனு 24.09.2025 அன்று அழைக்கப்படும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.16 05:02:59 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.16 05:03:04 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.